# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011   நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in   இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 45/2021      நாள் 11.10.2021

**வாக்கு எண்ணிக்கை முடிவினை 12.10.2021 அன்று காலை 8.00 மணிக்கு மேல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதள முகவரி https://tnsec.tn.nic.in–ல் உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட 140 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 74 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 1,381 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 2,901 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களுக்கும் மற்றும் 22,581 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் என 27,003 பதவியிடங்களுக்கு சாதாரணத் தேர்தல் அறிவிக்கை 15.9.2021–ல் வெளியிடப்பட்டு வேட்புமனுக்கள் பெறப்பட்டன.

இதில், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 2,874 பதவியிடங்களும், கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 119 பதவியிடங்களும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 5 பதவியிடங்களும், மாவட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 2 பதவியிடங்களும் வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒரு கிராம ஊராட்சி தலைவர் பதவியிடம் நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலும், ஒரு ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கும், 2 கிராம ஊராட்சி தலைவர் பதவியிடத்திற்கும், 21 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கும் வேட்புமனுக்கள் பெறப்படாததாலும், திரும்பப்பெற்றுக்கொண்டதாலும் இப்பதவியிடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெறவில்லை. மீதமுள்ள 138 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், 1375 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், 2779 கிராம ஊராட்சி தலைவர் மற்றும் 19,686 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் இரண்டு கட்டமாக 6.10.2021 மற்றும் 9.10.2021 ஆகிய நாட்களில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் 74 வாக்கு எண்ணும் மையங்களில் 12.10.2021 அன்று காலை 08.00 மணிக்கு தொடங்கி நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணும் பணிக்கு 31245 வாக்கு எண்ணுகை அலுவலர்களும் பாதுகாப்பு பணிக்கு காவல்துறையைச் சார்ந்த 6228 அலுவலர்கள், காவலர்கள் ஈடுபட உள்ளனர்.

அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும், வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள பாதுகாத்து அறையிலிருந்து (Strong Room) வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் வாக்குப்பெட்டிகளை, வாக்குச்சீட்டுக்களை வகைப்படுத்தி பிரிக்கும் அறைக்கு (Sorting Room) கொண்டு சென்று அவைகளை வகைப்படுத்தி பிரித்த பின்னர் வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லும் வரையிலான நடவடிக்கைகள் அனைத்தும் CCTV கேமராக்கள் மூலம் பதிவு செய்யப்படும்.

மேலும், வாக்கு எண்ணும் அறைகளில் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் அனைத்தும் CCTV கேமராக்கள் மூலம் பதிவு செய்யப்படும்.

வேட்பாளர்கள், வேட்பாளரின் முகவர், வாக்கு எண்ணுகை முகவர்களைத் தவிர்த்து பொதுமக்கள் யாரும் வாக்கு எண்ணும் மையங்களுக்குள் அனுமதிக்கப்படமாட்டார். வாக்கு எண்ணும் மையங்களுக்குள் வேட்பாளர்கள், வேட்பாளரின் முகவர், வாக்கு எண்ணுகை முகவர் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் வாக்கு எண்ணுகை அலுவலர்கள் யாரும் கைபேசிகளை கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அலுவலர்கள் வாக்கு எண்ணிக்கையில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அடையாள அட்டைகள் (பதவி வாரியாக) வழங்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை முடிவினை 12.10.2021 அன்று காலை 8.00 மணிக்கு மேல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதள முகவரி **https://tnsec.tn.nic.in**–ல் உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள், வாக்கு எண்ணிக்கையின் முடிவினை உடனுக்குடன் தெரிவித்து கூட்ட நெரிசலைத் தவிர்ப்பது, கோவிட்–19 நெறிமுறைகளை கடைபிடிப்பது குறித்து 11.10.2021 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர். வெ. பழனிகுமார்,இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்ற காணொலி காட்சி மூலமாக நடைபெற்ற கூட்டத்தில், தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் காண்காணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

..3..

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு. ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., மற்றும் ஆணையத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்